# பாடசாலைகள் அத்துடன் விளையாட்டு மைதானங்களைச் சுற்றியுள்ள

## வாகன போக்குவரத்து பாதுகாப்பை முன்னேற்றுதல்

தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு வாகனத்தில் ஓட்டிவரும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்ல, அதேபோல் பாடசாலைகளையும் அத்துடன் விளையாட்டு மைதானங்களையும் சுற்றியுள்ள வாகன நெரிசலின் அளவும் அதிகரிக்கின்றது. ஒரு பெற்றோர் என்ற மட்டில், உங்களது பிள்ளைகளுக்கு ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்க நீங்கள் செய்யக்கூடியவை பல இருக்கின்றன:

- உங்களது மோட்டார்வண்டியை வீட்டில் நிறுத்திவிட்டு, உங்களது பிள்ளையுடன் பாடசாலைக்கு நடந்து செல்லவும்.
- உங்களது பிள்ளைக்கு வயது போதுமானதாயிருந்தால், பிறம்ரன் போக்குவரத்து சேவையை எடுக்க அல்லது நடந்து செல்ல, துவிச்சக்கர வண்டியிற் செல்ல அல்லது உருளும் சில்லுகளுடைய பலகையில் (skate) செல்லவோ அனுமதிக்கவும்.
- நீங்கள் உங்களது பிள்ளையை பாடசாலைக்கு வாகனத்தில் ஓட்டிச் செல்வதென்றால், பாடசாலைகள் அத்துடன் விளையாட்டு மைதானங்களைச் சுற்றியிருக்கும் போக்குவரத்து விதிகளை அறிந்து வைப்பதுடன் அதற்கமைய நடந்து ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்க உதவவும்.

### வாகனத்தரிப்பு தடையிடப்பட்ட பிரதேசம்



வாகனத்தரிப்பு தடையிடப்பட்ட பிரதேசத்தில் வாகனத்தைத் தரித்துவிட வேண்டாம். பிரயாணிகளை இறக்குவதற்கோ அல்லது ஏற்றுவதற்கோ சிறிது நேரத்திற்கு நிறுத்தி வைத்திருக்கலாம் ஆனால் நீங்கள் வாகனத்திற்குள் காத்திருக்க முடியாது அல்லது வாகனத்தை கவனிப்பார் அற்று விட்டுச் செல்லமுடியாது.

### நிறுத்தி வைத்துக்கொண்டு இருக்க முடியாத பிரதேசம்.



எந்தக் காரணத்திற்காவது, நிறுத்தி வைத்துக்கொண்டு இருக்க முடியாத பிரதேசத்தில் நிறுத்திவைத்துக்கொண்டு இருக்க வேண்டாம். இந்த பிரதேசங்கள், ஒரு நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கப்படும் வாகனம், மற்ற சாரதிகள் அத்துடன் பாதசாரிகளின் பார்வைக்கு இடையூறாக இருக்கக் கூடிய அத்துடன் ஒரு மோதல் நடைபெறும் சாத்தியக் கூற்றைக் கூட்டக் கூடிய பிரதேசங்களாகும். நிறுத்தி வைத்துக்கொண்டு இருக்க முடியாத பிரதேசம் ஒன்றை பின்வரும் இடங்களில் நீங்கள் காணலாம்:

- ஒரு நியமிக்கப்பட்ட பாடசாலை தெருக்கடப்பிலிருந்து 15 மீற்றருக்குள்
- ஒரு தெருக்களின்சந்திப்பிலிருந்து (intersection) 15 மீற்றருக்குள்
- ஒரு பாடசாலையைச் சேர்ந்த இடம், விளையாட்டு மைதானம் அல்லது பூங்காவிற்கு அருகேயுள்ள ஒரு தெருப்பாதையின் இரு பக்கங்களிலும்

### கிஸ் அன்ட் ரைட் (KISS AND RIDE)

இவை உங்களது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து ஏற்றுவதையும் அல்லது இறக்குவதையும் வேகமாகவும் அத்துடன் திறமையாகவும் செய்வதற்காக நியமிக்கப் பட்டிருக்கும் பகுதிகளாகும். கிஸ் அன்ட் ரைட் பகுதிகளில், உங்களது வாகனத்தை தரித்து வைக்கவோ அல்லது கவனிப்பார் அற்று விட்டுச் செல்லவோ வேண்டாம்.

### தீயணைக்கும் வாகனங்களுக்கான பாதைகள் (FIRE ROUTES)

ஒரு அவசர நிலைமையின் பொழுது, தீ அத்துடன் அவசர நிலைமைக் குழு ஒரு கட்டிடத்தை வேகமாக அணுகுவதற்கு, தீயணைக்கும் வாகனங்களுக்கான பாதைகள் உதவுகின்றன. உங்களது பிள்ளைகளை இறக்குவதற்கு அல்லது ஏற்றுவதற்கு இந்தப் பாதையை மறிப்பதுகூட, எல்லோருக்கும் மிக ஆபத்தாக இருக்கலாம். ஒரு தீயணைக்கும் வாகனங்களுக்கான பாதையைத் துர்ப்பிரயோகம் செய்ததற்காக நீங்கள் ஒரு அபராதத்தைப் பெறலாம்.

### தெருக்கடப்பு காவலர்கள் (CROSSING GUARDS)




தெருக்கடப்பு காவலர்களால் காவப்படும் நிறுத்து அடையாளங்களுக்கு, ஒரு தெருச்சந்திப்பில் காணப்படும் ஒரு நிறுத்து அடையாளத்திற்கு உள்ள அதே சட்டரீதியான அதிகாரம் இருக்கின்றது. ஒன்ராறியோ பெருஞ்சாலை போக்குவரத்துச் சட்டத்தில் இந்த அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளது. தெருக்கடப்பு காவலர் நிறுத்து அடையாளத்தை நிமிர்த்தி பிடித்துக்கொண்டு தெருப்பாதையில் இறங்கப் போகும் நேரத்தில் நீங்கள் வாகனத்தை நிறுத்த வேண்டும், அத்துடன் பிள்ளைகளும் அத்துடன் தெருக்கடப்பு காவலரும் பாதுகாப்பாக தெருப்பாதையைக் காலிசெய்யமட்டும் வாகனத்தை நிறுத்தி வைத்திருக்க வேண்டும்.

### பாடசாலை பேருந்துகள்




எந்த தெருப்பாதையிலாவது, ஒரு மேலுள்ள விட்டுவிட்டு மின்னும் சிவப்பு வெளிச்சத்துடன் நிறுத்தப்பட்டிருக்கும் பாடசாலை பேருந்திற்கு, குறைந்தது 20 மீற்றருக்கு அருகாமையாக வரமுதல் வாகனசாரதிகள், வாகனத்தை நிறுத்த வேண்டும். பேருந்து செல்ல ஆரம்பிக்கும்வரை அல்லது சிவப்பு அடையாள வெளிச்சம் மின்னுவதை நிறுத்தும் வரை, வாகனசாரதிகள் தொடர்ந்து செல்ல முடியாது.

### பாடசாலைப் பிரதேச அடையாளங்கள்



இந்த அடையாளங்கள், வாகனசாரதிகளுக்கு அவர்கள் ஒரு பாடசாலையுள்ள இடத்தை அணுகுவதாக எச்சரிக்கை செய்யும். வேகத்தைக் குறைக்கவும். மேலதிக அவதானத்துடன் ஓடவும் அத்துடன் பிள்ளைகளையும் அவதானிக்கவும்.

### பாடசாலை தெருக்கடப்பு அடையாளங்கள்



இந்த அடையாளம், ஒரு பாடசாலை தெருக்கடப்பிற்கான எச்சரிக்கையை செய்கின்றது. பிள்ளைகளை அவதானித்து அத்துடன் தெருக்கடப்பு காவலரின் (உசுளளைபெ பரயசன) பணிப்புகளைக் கடைப்பிடிக்கவும். தெருக்கடப்பு காவலாளர் கடப்புகளில் இல்லாத பொழுது, சாரதிகள் வாகனத்தை நிறுத்தத் தேவையில்லை.

### பாதசாரிகளை (PEDESTRIAN) எதிர்கொள்ள எச்சரிக்கும் அடையாளங்கள்



இந்த அடையாளமானது வாகனச்சாரதிகளுக்கு அப் பிரதேசத்தில் பாதசாரிகள் இருக்கலாம் என்பதைப் பற்றிய முன்கூட்டிய எச்சரிப்பாகும்.

### விளையாட்டு மைதானத்தை எதிர்கொள்ள எச்சரிக்கும் அடையாளங்கள



இந்த அடையாளம், எதிர்வரும் தெருவுக்கு அருகே ஒரு விளையாட்டு மைதானம் இருக்கின்றது என்பதை முன்கூட்டியே வாகனசாரதிகளுக்கு எச்சரிக்கின்றது. விளையாட்டு மைதானத்திற்கு போய் வந்து கொண்டிருக்கும் பிள்ளைகள் தெருவில் காணப்படலாம்.

### ஒரு வாய்ப்பை ஏன் எடுக்கவேண்டும்?

பாடசாலை பிரதேச போக்குவரத்து விதிகளை மீறுவதற்கான உண்மையான தண்டனை, தெருவை உபயோகிக்கும் பிள்ளைகளினதும் அத்துடன் மற்றவர்களினதும் பாதுகாப்பை நீங்கள் ஆபத்திற்குள்ளாக்குவது ஆகும். ஒரு வாகனசாரதி என்ற மட்டில், எங்களது தெருக்களை முக்கியமாக பாடசாலைகளையும் அத்துடன் விளையாட்டு மைதானங்களையும் சுற்றி பாதுகாப்பாக வைப்பதற்கு, வாகனப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விதிகளையும் அத்துடன் பாதுகாப்பு நடைமுறைகளையும் நீங்கள் மதிப்பது முக்கியமாகும்.

2009-0828

Brampton Safety Council

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும்

905.874.2500 • TTY 905.874.2130

BRAMPTON Flower City

brampton.ca